மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : புலிகள் வாழும் காடுகள் தமிழ் நாட்டில் கீழ்க்கண்ட வனக் கோட்டங்களில் உள்ளன :—

(1) ஓசூர்.

(2) தர்மபுரி

(3) கோயம்புத்தூர் வடக்கு

(4) மத்தியக் கோயம்புத்தூர்

(5) கோயம்புத்தூர் தெற்கு

(6) நீலகிரி வடக்கு

(7) நீலகிரி தெற்கு

(8) மதுரை தெற்கு

(9) மதுரை வடக்கு

(10) இராமநாதபுரம் (ஸ்ரீவில்லிப்புத்தூர் சரகம்)

(11) திருநெல்வேலி வடக்கு

(12) திருநெல்வேலி தெற்கு

இவற்றைத்தவிர நீலகிரி மாவட்டத்திலுள்ள முதுமலை வனவிலங்கு உய்விடத்திலும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள புலிகள் உய்விடத்திலும் புலிகள் காணப்படுகின்றன.

* 58 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether it is a fact that an officer of the State Government has been deputed to Dehra Dun for training in tiger breeding and census; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) இந்திய அரசு எல்லா மாநில அரசுகளுக்கும் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, மாநில வன விலங்கு அலுவலர் திரு. மஹமது பஷீரை, டேராடூனிலுள்ள வன ஆராய்ச்சி நிலையம், மற்றும் கல்லூரியில், புலிகளின் கணக்கெடுப்பு சம்பந்தமான பயிற்சி பெறுவதற்காக, தமிழ்நாடு அரசு சென்ற மார்ச் திங்களில் அனுப்பிவைத்தது. பயிற்சிக் காலம் 3—3—1972 முதல் 12—3—1972 முடிய. மாநிலத்தில் சென்ற மே மாதம் நடைபெற்ற

1973 பிப்ரவரி 7]

புலிகளின் கணக்கெடுப்பு சம்பந்தமான பணிகளை மேற்கொள்ளவும், இந்திய அரசுக்குத் தகவல்களை அனுப்புவது பற்றியும், அவருக்கு அங்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஹாண்டே தம் கேள்வியைப் போட விரும்பவில்லை. ஆகவே அடுத்த கேள்விகள் 57, 58 ஆகிய இரண்டையும் சேர்த்து எடுத்துக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : திரு. சௌந்தரபாண்டியன் கேட்டிருக்கிற புலிகள் வாழ் காடுகளில் எத்தனை புலிகள் இருக்கின்றன என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்போதைய கணக்கு புலிகள் 29, சிறுத்தைப் புலிகள் 28.

Crash programme for transport service.

* 59 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) whether the Government have drawn up a crash programme for the city transport service and express bus service; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) மாநகரப் பேருந்துப் பணியினை மேம்படுத்த, 23 பேருந்துகள் புதிதாகச் சேர்க்கப்பட்டன. தவிரவும் நெரிசல் நேரத்தில் பேருந்துகளை அதிக எண்ணிக்கையில் விடுவது, நெரிசல் நேரத்தின்போது பேருந்து (நிலையத்தில்) நிற்கும் நேரத்தைக் குறைப்பதன் மூலம் கால அட்டவணைகளை மாற்றி அமைப்பது ஆகிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவரை, 1971 அக்டோபர் முதல் 1971 டிசம்பர் வரை உள்ள கால அளவில் விரைவுத் திட்டத்தின்கீழ் 75 பேருந்துகள் கட்டப்பட்டன. இவற்றில், 17 பேருந்துகள் புதிய வழித்தடங்களில் விடுவதற்காகவும், 58 பேருந்துகள் பழுதடைந்த பேருந்துகளுக்குப் பதிலாகவும் கட்டப்பட்டன.